Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆனி 30 | 14 - 07 - 1992 | செவ்வாய்க்கிழமை | ஓசை 147

## சுடப்பட்ட விமானத்தில் கறுப்புப்பெட்டி இல்லையாம்

வட பகுதியில் யுத்த நடவடிக்கைகளுக்கு சீன தயாரிப்பான வை-8 ரக விமானம் பயன்படுத்தப்பட்டதனால் அதன் கறுப்புப்பெட்டி அகற்றப்பட்டது என கேணல் முனசிங்கா தெரிவித்துள்ளார். கடந்த ஐந்தாம் திகதி இயக்கச்சி, கட்டைக்காடு, ஆனையிறவு பகுதிகளில் தொடர்ச்சியாக பீப்பாக் குண்டுகளை வீசிக் கொண்டிருந்த வை-8 ரக விமானம் விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது தெரிந்ததே. மேற்படி விமானத்தில் கறுப்புப்பெட்டி என்னும் தகவல் பதிவு கருவி இல்லை எனவும் அதில் இருந்த இப் பெட்டி கடந்த காலங்களில் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்காக இராணுவத்தினரால் அகற்றப்பட்டது எனப் பத்திரிகையாளரிடம் பேசுகையில் இராணுவ அதிகாரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# படைகள் எதிர்கொள்ளும் பேரிழப்பு
# அரசாங்க உயர்மட்டத்தில் திகைப்பு

## தண்ணீரூற்றை நோக்கி அகோர எறிகணைவீச்சு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்தும், அலம்பிலில் இருந்தும் தண்ணீரூற்றை நோக்கி பலத்த எறிகணை வீச்சுக்கள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. இந்த எறிகணைகள் மக்கள் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்துவெடிப்பதனால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

குமுழமுனை, அலம்பில், உட்புமாவெளி, உடுப்பைக்குளம் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்துதண்ணீரூற்றுப்பகுதி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அக்கரைப்பற்று மக்களுக்கு மருத்துவ வசதி மறுப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று மக்களுக்கு மருத்துவ வசதி முற்றாக மறுக்கப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று தமிழ் கிராமத்திலுள்ள ஒரேயொரு மருத்துவ மனை எதுவித வசதிகளும் அற்ற நிலையில் காணப்படுகிறது.

இம் மருத்துவ மனைக்கு வாரம் ஒரு தடவை மட்டும் வைத்தியர் வருவார். இங்கு ஒரேயொரு தாதியும் இரண்டு சிற்றூழியர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர். மருத்துவ மனையில் மருந்துப் பொருள்கள் கூட கிடையாது.

கடும் நோயாளிகள் இங்கிருந்து அம்பாறைக்குச் சிகிச்சைக்காகச் செல்லும்போது அங்கும் உரிய சிகிச்சை வழங்கப்படாது புறக்கணிக்கப்படுகிறார்கள்.

## கல்குடா பகுதியில் புதிய இராணுவ முகாம்

(கொழும்பு)

கல்குடாவில் புதிய இராணுவ முகாம் ஒன்றை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அங்கு முஸ்லிம்களைக் குடியேற்றி அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதே இந்த முகாம் அமைக்கப்படுவதன் நோக்கமாகும்.

கல்முனைப் பகுதியிலுள்ள பத்தாயிரம் ஏக்கரில் முஸ்லிம்களால் மேற்கொள்ளப்படவுள்ள விவசாயச் செய்கைக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு இந்த முகாம் அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவ அணுகுமுறை விளைவுபற்றி கொழும்பில் மந்திராலோசனை

(கொழும்பு)

சமீப காலமாக வட-கிழக்கின் பல்வேறு போர்முனைகளில் சிறிலங்கா ஆயுதப்படையினருக்கு ஏற்பட்டுள்ள பாரிய உயிர்ச் சேதங்கள் பிரேமதாசா அரசாங்கத்தைத் திகைப்பில் ஆழ்த்தியுள்ளது. இதன்காரணமாக எதிர்கால இராணுவ நடவடிக்கையால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகள் குறித்து அரசாங்க உயர் மட்டத்தில் தீவிரமாகப் பரிசீலிக்கப்படுவதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

பெரும் எடுப்பில் கடந்த மே மாதம் 28ஆம் திகதி வடக்கில் பலமுனைகளில் எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போதும், இதே காலப் பகுதியில், விடுதலைப் புலிகள் வடக்கிலும், கிழக்கிலும் நடத்திய தாக்குதல்களினால் ஆயுதப் படையினருக்கு ஏற்பட்ட பாரிய உயிரிழப்பும், இராணுவத் தளபாட இழப்புக்களும் சிறிலங்கா அரசாங்க உயர் மட்டத்தில் ஆச்சரியத்தையும், திகைப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

மேலும், ஒப்பரேசன் பலவேகய II ஒப்பரேசன், சண்டமாருதம், ஒப்பரேசன் எழுசக்தி என்பன புலிகளை எந்தளவிற்குப் பலவீனப்படுத்தியுள்ளது என்று குறித்தும் அரச தரப்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில், யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றும் நோக்கில் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டால், யாழ். நகரில் ஏற்படும் அழிவுகள், மக்களின் உயிரிழப்புக்கள்என்பவை ஒருபுறம் இருக்க இராணுவத் தரப்பில் ஏற்படக் கூடிய உயிரிழப்பு பற்றியும் வெகுவாக ஆராயப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஒன்றரை மாதங்களாக இடம்பெற்ற மோதலில் புலிகள் சில இடங்களில் எதிர்கொண்டும் சில இடங்களில் கொரில்லாப் பாணியிலும் தாக்குதல் நடத்தியமையே அரசதரப்பின் இக்குழப்பத்திற்குகாரணமாகும். அதாவது புலிகளின் பலத்தை கணிப்பதில் இராணுவ தரப்பில் குழப்பம் நிலவுவதாகத் தெரியவருகின்றது.

இந்த நிலையில், அடுத்த கட்ட இராணுவ நடவடிக்கை குறித்தும், அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்தும் கொழும்பில் தீவிர மந்திர ஆலோசனை இடம்பெறுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## எல்லைப்புறப் பாதுகாப்பை

## நிதிஒதுக்கீட்டில் பாரபட்சம் தமிழ் பா.உ.க்கள் அசிரத்தை

(மன்னார்)

வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியில் 70 சத வீதம் மன்னார் தீவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

1991,92-ம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 99இலட்சம் ரூபாவில் ஒரு அரசாங்க அதிபர் பிரிவைக் கொண்ட மன்னார் தீவுக்கு 69 இலட்சம் ரூபாவும் நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைக் கொண்ட மன்னார் பெருநிலப் பரப்பிற்கு 30 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 70 சத வீத மக்கள் வாழும் பகுதிக்கு 30சத வீத நிதியும் 30 சதவீத மக்கள் வாழும் பகுதிக்கு 70 சத வீத நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிதி ஒதுக்கீடு பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் மேற்கொள்ளப்படுவதாகும். இந் நிதி ஒதுக்கீட்டில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் காட்டிய அசிரத்தையே இந் நிலைக்குக் காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

## மன்னார் மாவட்ட தபால்கள் இராணுவத்தால் சோதனை

(மன்னார்)

மன்னார் மாவட்ட தபாற் பொதிகள் இராணுவத்தால் கிழிக்கப்பட்டு தபால்கள் ஆராயப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, மன்னார் மாவட்ட தபாற்பொதிகள் இராணுவத்தினரால் உலங்கு வானூர்தி மூலம் எடுத்துச் செல்லப்பட்டு அனுராதபுரத்தில் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட பொதிகளில் சில கத்திகளால் கிழிக்கப்பட்டு தபால்கள் ஆராயப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

## மீண்டும் தமிழ்நாடு செல்ல தமிழ் அகதிகள் விருப்பம்

(மன்னார்)

தமிழகத்திலிருந்து மன்னாருக்கு பலவந்தமாகத் திருப்பி

இதுவரை செய்து கொடுக்கப்படாமையினாலேயே அவர்கள் திரும்பிச் செல்ல திட்ட

...குடியேற்றி அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதே இந்த முகாம் அமைக்கப்படுவதன் ... பாதுகாப்பு அளிப்பதற்கு இந்த முகாம் அமைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## பருத்தித்துறை ஆஸ்பத்திரி; வைத்தியர் பற்றாக்குறை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நிலவும் டாக்டர்கள் பற்றாக்குறைவாலும் மருந்துகள் தட்டுப்பாட்டாலும் நோயாளர்கள் பலத்த இன்னல்களைஅனுபவித்து வருகின்றனர். இவ் வைத்தியசாலையில் நிலவும் டாக்டர்கள் பற்றாக் குறையையும் மருந்துகள் தட்டுப்பாட்டையும் நீக்க யாழ். சுகாதார சேவைகள் அத்தியட்சகர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (25)

பல்கலை. தெரிவு செய்யப்பட்டோருக்கு

## கற்கை தொடங்கும் வரை வேலை வாய்ப்பு ஏற்பாடு

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ள சுமார் 9,200 மாணவமாணவிகளுக்கு பல்கலைக்கழக கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படும் வரை வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கபபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களின் இருப்பிடங்களுக்கு அருகேயுள்ள தொழில்நிறுவனங்களில் இந்த வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும்,

வேலையற்ற பட்டதாரிகளுக்கும் அரசாங்க தனியார் துறைகளில், வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு புறம்பாகவே பட்டதாரி மாணவர்களுக்கு வேலைபெற்றுக்கொடுக்கும் புதிய திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## க. பொ. த. (உ/த) பரீட்சை ஆகஸ்ட் 1 இல் ஆரம்பம்

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டில் 1110 பரீட்சை நிலையங்களில் க. பொ. த. உயர்தரப் பரீட்சை வரும்ஓகஸ்ட் 1ஆம்திகதி ஆரம்பமாகும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது

பெலவத்தை, பூசா, பொரளை, மகசீன் ஆகியகைதிகள் முகாம்களில் உள்ளவர்களுக்கும் இப் பரீட்சை எழுத அங்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றும்,

இப் பரீட்சை 25 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கூடியளவு மாணவர்கள் மருத்துவபீடத்திற்கு அனுமதி

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களில் மருத்துவபீட மாணவர்களின் எண்ணக்கையை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் ஒன்றை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அடுத்த செப்டெம்பர் மாதத்தில் புதிய மருத்துவ பீடம் செயற்படத்தொடங்கும். 131 மாணவர்கள் இதில் சேர்த்துக்கொள்ளப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது.

# எல்லைப்புறப் பாதுகாப்பை வலுப்படுத்த ராணுவத்திற்கு உத்தரவு

### புலிகளின் தாக்குதலின் எதிரொலி

(கொழும்பு)

வட மத்திய மாகாண எல்லைப்புறக்கிராமங்களில் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு சிறிலங்கா இராணுவத்தினருக்குஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வண்ணான்குளம் இராணுவ முகாமை புலிகள் முற்றாக அழித்ததை அடுத்துசிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் உயர் பீடம் இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இரண்டு வருட யுத்தத்தில் 3000 படை பலி: 8000 பேர்படுகாயம்

(கொழும்பு)

கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்றுவரும் போரில் 3000 க்கு அதிகமான படையினர் உயிரிழந்ததாகவும் 8000 க்கும் அதிகமானோர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்தவர்களில் அநேகமானோர் தரைப்படையினர் ஆவர். படுகாயமடைந்தவர்கள் யுத்தத்திற்கு செல்லமுடியாத நிலையில்உள்ளனர்.காயமடைந்தவர்களில் 7300 பேர் தரைப்படையினர் அதிகாரிகள் உட்பட பல தரத்தையும் சார்ந்தவர்கள் எனவும் ஏனையோர் கடல், ஆகாய படையைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சிறிலங்கா ராணுவத்திற்கு பெரும் ஆள் திரட்டல்

சிறிலங்கா இராணுவத்திற்கு ஆட்கள் திரட்டப்புட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இராணுவத்திற் சேரவிரும்புபவர்கள் குறிப்பிட்ட சில முகாம்களிற்கு நேரில் சமூகம் தரும்படி விளம்பரங்கள் வெளியாகி உள்ளன.

அண்மைக்காலங்களில் இடம்பெற்ற சண்டைகளில் உயிரிழந்த, படுகாயமடைந்து சண்டையில் ஈடுபட முடியாத இராணுவத்தினரின் வெற்றிடங்களை நிரப்பஇந்தஆள்திரட்டும் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சீன எவ்-7 விமானங்கள் சண்டைக்குப் பொருத்தமற்றவை

### பி.பி.சிசெய்தியாளர் கருத்து

(லண்டன்)

சிறிலங்கா அரசு சென்ற ஆண்டு சீனாவிடமிருந்து கொள்வனவு செய்த எவ் - 7 ரக ஜெற் விமானங்கள் இப்பொழுது நடைபெறும் சண்டைக்குப் பொருத்தமற்றவை என பி.பி.சியின் கீழ்த்திசைப் பிரிவுச்செய்தியாளர்றொபேட் அடாம்ஸ் தமது செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இந்த ஆறு எவ்-7 ரக விமானங்கள் சண்டையின்போது பயன்படுத்தப் பட்டாலும் அவை வைத்த குறி தவறாது தாக்கும் ஆற்றல் உடையவையல்ல. அவற்றின் அதிவேகம் காரணமாக இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகளின்போது பயனுள்ளவையாக இருக்கமாட்டாது.

இந்த விடயத்தில் தாழ்ந்து பறந்து குண்டுகளைப்போட்டு விட்டு மீண்டும் உயரப்பறந்து செல்லும் பழைய ரகவிமானங்களே இராணுவத்தின் முக்கிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

(மன்னார்)

தமிழகத்திலிருந்து மன்னாருக்கு பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்பட்ட அகதிகளில் பலர் தாம் மீண்டும் இந்தியாவிற்கு திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்திலிருந்து கப்பல் மூலம் அழைத்துவரப்பட்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நிர்க்கதியான நிலையில் மன்னாரில் தவிக்கின்றனர். இவர்களுக்குத்தேவையான அடிப்படை வசதிகள் எதுவும் இதுவரை செய்து கொடுக்கப்படாமையினாலேயே அவர்கள் திரும்பிச் செல்ல திட்டமிட்டுள்ளனர். அங்கு இவர்களுக்கான உணவு, சுகாதாரம், புனர்வாழ்வு, பாதுகாப்பு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஒரு குடும்பத்திற்கு 300 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களே வழங்கப்படுகின்றன. இதனால் ஐந்து பேர்களைக் கொண்ட குடும்பங்கள் பல உண்ண உணவின்றி பட்டினிச்சாவை எதிர் நோக்கியுள்ளனர். மேற்படி தகவல்கள் கடந்தவியாழக்கிழமை கொள்ளுப்பிட்டி கிராமோதய நிலையத்தில் நடைபெற்ற வட-கிழக்கிற்கான உணவு, புனர்வாழ்வு, சுகாதார, பாதுகாப்பு கூட்டுக் கமிட்டி கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக சேவைகள் அமைச்சர் பி. தயாரத்ன தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், அம்பாறை, மட்டக்களப்பு, திருமலை, மன்னார் மாவட்ட அரச அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கொழும்பு செல்கின்றனர்

(யாழ்ப்பாணம்)

இன்று திருக்கோணமலை செல்லும் குமண கப்பல் மூலம் யாழ். அரச அதிபர், யாழ். கல்விப்பணிப்பாளர் ஆகியோர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் அமுலிலிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று நண்பகல் 12 மணியுடன் நீக்கப்பட்டுவிட்டதாகசிறிலங்கா கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

## ஹமில்டன் வனசிங்கா மீது 'ஒப்சோபர்' மீண்டும் சாடல்

(கொழும்பு)

கூட்டுப்படை தலைமைச் செயலகத்தின் முன்னைய இராணுவ நடவடிக்கைகள் எதிரியைத் தேடி அழிக்கும் நடவடிக்கைகளாகவே அமைந்திருந்தன நடவடிக்கையின் பின் இராணுவம் பின்வாங்கியதும் புலிகள் மீளவும் அந்த இடங்களுக்கு திரும்பக் கூடியதாக இருந்தது. இப்போது இராணுவத் தளபதி லெப். ஜெனரல் வைத்திய ரட்ணா, கடற்படைத்தளபதி அட்மிரல் பெர்னான்டோ, விமானப் படைத் தளபதி ஏயார் மாக்ஷல் எஸ். குணவர்த்தனா ஆகியோரின் புதிய தந்திரோபாயம் தாக்கிய இடங்களைப் பிடித்து வைததிருடபதில் வெற்றியளித்துள்ளது என்று சண்டே ஒப்சோபர் இருதரப்புகளையும் ஒப்புநோக்கி கூட்டுப்படை தலைமைச் செயலகத்தைநாசூக்காகச்சாடுகிறது கூட்டுப்படைதலைமைச் செயலகம் அரசு சுரப்புப்பத்திரிகையில் விமர்கிக்கப்படுவது இது இரண்டாவது முறையாகும். இது இராணுவ தலைமைப் பீடத்திற்குள் நிலவும் ளவையே காட்டுகிறது. என்று இராணுவ அவதானிகள் கருதுகின்றனர்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

27-06-92 அன்று சண்முகம் யோகராசா (இல.652762042V பாரதிபுரம், கலாசாலைறோட். திருநெல்வேலி) என்பவருடைய அடையாள அட்டை திருநெல்வேலியில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். (2811)

### விண்ணில் அல்ல விடிவெள்ளி

மீரா வெளியீடு சமூகநாவல் ''கிளிநொச்சிப் பிரதேசத்தின் சாதாரண ஒரு விவசாயக் குடும்பம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை போர்க்காலப் பின்னணியின் மத்தியில்'' எழுதியிருக்கிறார். பிரபல எழுத்தாளர் ''தாமரைச்செல்வி'' விற்பனையாகிறது. (2810)

### கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்தல் சம்பந்தமான கூட்டம் ஒன்று இலங்கைசெஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை வலிகாமம் வடக்குப் பிரிவினால் இன்று 9.30 மணிக்கு அளவெட்டி அருணோதயக்கல்லூரியில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு இப்பிரிவில் உள்ள தொண்டர்களையும் அங்கத்தவர்களையும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகங்கஸ்தார்களையும், சமூக சங்கங்களின் அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். (பா(

★ ★ ★

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சகல உதவி அரசாங்க அதிபர்களுக்குமான கூட்டம் ஒன்று யாழ்.செயலகத்தில் நடைபெற உள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்ற இக் கூட்டத்திற்கு தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (பா)

### திருவிளக்குப் பூசை

கொழும்புத்துறை கிழக்கு மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன்- ஐயனார்ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் பூரணைதினத்தன்று மாலை ஆறு மணிக்கு நடைபெறும் ''திருவிளக்குப்பூசை'' இன்று செவ்

## நினைவுகூருகின்றோம். .

## 1992 - 07 - 14

1979 ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்காகாவல் துறையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதையின் பின் சடலமாக வீசப்பட்ட நாட்டுப்பற்றாளரான -

**இன்பம்** (விசுவஜோதி இரத்தினம் - நவாலி) மற்றும், இவரது மைத்துனரான தமிழ் இளைஞன்.

இதே கைது நடவடிக்கையின் பின் காணாமல்போன நவாலி, சாவகச்சேரி, நல்லூர்ப் பகுதிகளைச் சேர்ந்த 4 -தமிழ் இளைஞர்கள்.

1986 ஆம் ஆண்டு மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 - தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - கொக்காவில் பகுதியில், இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் விவசாயி.

1989 ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட -

**நாகேஸ்** (பஞ்சாட்சரம் நாகேந்திரராசா-காரைநகர்)

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு-கொக்காவில் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் 4ஆம் நாள் சமரில் வீரச்சாவெய்திய -

**கோபி** (அம்பாறை)

**லெப். மாவி** (பாலசிங்கம் பரமானந்தம் - 156, மாவிவீதி, யோகபுரம், வவுனிக்குளம், முல்லைத்தீவு)

**லெப். சுமித்/கமித்** (முத்துமாணிக்கம் சண்முகராசா - தென்னியன்குளம், துணுக்காய், முல்லைத்தீவு)

**லெப் நியூட்டன்** (பெ.புஸ்பராஜா - கிளிநொச்சி)

**2 ஆம் லெப். மாலா** (சிறிமதி அருளம்பலம்-நெடியகாடு, வல்வெட்டித்துறை)

**2 ஆம் லெப். அஜந்தா** (சுசீலா தங்கரத்தினம் - சுசீலாவீதி, கல்வியங்காடு)

கொக்காவில் முகாம் தகர்ப்பின்போது தப்பியோடிய சிறிலங்கா இராணுவத்தினருடன் பலகைபோட்ட பாலத்தடியில ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**ராஜு** (கறுப்பையா தியாகராசா - ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு

**பகீ / பகீர்** (கோவிந்தபிள்ளை சிவஞானம்-சில்வாவீதி வட்டக்கட்சி, கிளிநொச்சி)

மாவிட்டபுரத்தில், எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வாகனவிபத்தில் எம்மைப் பிரிந்த -

**கப்டன் சாளி** (தேவநேசன் சாள்ஸ் ஜெகோநேசன் - நவாலி தெற்கு, மானிப்பாய்)

மட்டக்களப்பில், சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுககொல்லப்பட்டு, ரயர்போட்டு எரிக்கப்பட்ட 28 தமிழர்கள்.

திருக்கோணமலை, நிலாவெளி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலாங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 6 - தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

1991-ம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆகாயகடல்- வெளி நடவடிக்கைகளின் போது அப்பகுதி இராணுவத்தினருக்குத் துணையாக வெற்றிலைக்கேணியில் கடல் மூலம் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடான மோதலில் வீரச்சாவெய்திய-

**லெப். கேணல் சூட்டி** (சின்னத்தம்பி இராசு செல்வேந்திரன்-கெருடாவில், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.)

**மேஜர் லவன்** (துரைசிங்கம் ராஜ் சங்கர்-ஈ.எஸ். பெர்னான்டோ மாவத்தை, கொழும்பு-06)

**கப்டன் - சோலை** (சந்தியாப்பிள்ளை கிறிஸ்ரி கஜேந்திரன்- 4-ம் குறுக்குத்தெரு பருத்தித்துறை, யாழ்ப்பாணம்).

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



### செல்வன் சண்முகம் உதயவர்மன்

(பேபி)

(மு / புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவன், யா / கொச்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவன்)

விளக்குப்பூசை'' இன்று செவ்வாய்க்கிழமை மாலை விசேட அபிஷேகம், பூசை, வழிபாடு ஆராதனையுடன் நடைபெறும்.

திருவிளக்குப் பூசையை அடுத்து அம்மன்- ஐயனார் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கஉள்ளார். (24)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



லெப்.கேணல் சூட்டி

(இராசு செல்வேந்திரன்)

வீரஜனனம் 26-05-1967
வீரச்சாவு 14-07-1991

கைகள் வீசியெம் மண்ணில்
நடந்ததும்
களத்தில் நின்று நீ வெற்றி
குவித்ததும்
பொய்கள் அற்றவுன்
பேச்சும், சிரிப்பதும்
புலிகள் நெஞ்சிலே
வலிமை சேர்த்ததும்
சுடுமண்ணிலே நீ
நிமிர்ந்ததும்
''சூட்டி'' வீழ்ந்ததா?
என்று துடித்ததும்
ஒருவருடங்கள் ஆச்சுதா?
நண்பனே!
ஓம் எனில் எம் நெஞ்சு
மறக்குமா?

நண்பர்கள்

[சி/4698]

யாழ்ப்பாணம்).

லெப். யாதவன் (கந்தையா கமலக்கண்ணன்- 15/03, சந்தானமாதா ஒழுங்கை, பாண்டியன் தாழ்வு யாழ்.)

லெப். மார்க்கிறட் (சாந்தினி சிற்றம்பலம்-வேம்படி, உடுத்துறை வடக்கு தாளையடி, யாழ்.)

லெப. குணேஸ் (செல்வராஜா பேரின்ப மோகன்-செம்மணிவீதி- அரியாலை,யாழ்)

லெப். சந்திரன் (சங்கரப்பிள்ளை அன்பரசன்-'கயமுககிரி' நவாலி வடக்கு, மானிப்பாய்)

2-ம் லெப். பழனி (அந்தோனிப்பிள்ளை அருள்தாஸ் 3-ம் குறுக்குத்தெரு, கடற்கரை வீதி, பருத்தித்துறை, யாழ்.)

றெஜி (பொன்னையா பத்மநாதன்(பாப்பா)சங்கானை மேற்கு வடலி அடைப்பு, பண்டத்தரிப்பு யாழ்.)

பாரத் (இராசதுரை குகனதாஸ்-கணேசமூர்த்திவீதி, உடுவில் கிழக்கு, யாழ்.)

கண்ணன் (தர்மன்பிள்ளை ஏகாம்பரம், களுவாஞ்சிக் குடி, மட்டக்களப்பு)

வின்சன் (மு. சுரேஸ்குமார் - தம்பலகமம், திருக்கோணமலை)

தவம் / தனம் (அருளம்பலம் சௌந்தரராஜன் - கூழாவடிக்குடியிருப்பு, மட்டக்களப்பு)

ஜெகன் (கந்தசாமி சரவணபவன - 3 ஆம் கட்டை, செல்வநாயகபுரம், திருக்கோணமலை)

சுரேஸ் (சுப்பிரமணியம் சிவகுமார் - சித்தங்கேணி, வட்டுக்கோட்டை கிழக்கு, யாழ்.)

சுபைர் (கந்தசாமி இராசேந்திரம் - அரியாலை கிழக்கு, யாழ்.)

அல்வின் (சிவபாலன் கருணாகரன் - ஆரையம்பதி-2 மட்டக்களப்பு.)

ஜெயா (செல்லையா நடராசா - காயங்காடு, செங்கலடி, மட்டக்களப்பு.)

மனோ (தியாகராசா மகேந்திரம் - பனங்காடு, சாகாமம், அக்கரைப்பற்று, அம்பாறை.)

கைலன் (இராமலிங்கம் ராஜு - களுதாவளை, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.)

குழந்தை (செல்வராஜா ராஜகோபால் - பன்குடாவெளி, ஏறாவூர், மட்டக்களப்பு.)

நாதன் (சின்னத்தம்பி யோகராசா - புதுநகரம், மல்வத்தை, அம்பாறை.)

விமல் (கதிர்காமப்போடி குகதாஸ் - 9-ம் வட்டாரம், கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.)

லெப். றொபின்சன் (திருமேனிப்பிள்ளை கிருபாகரன் - அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.)

வேணு (கந்தசாமி பிரபா - கல்லடி, மட்டக்களப்பு.)

ராஜபாரதி (நாகலிங்கம் சிறிதவானந்தன் - ஆயித்தியமலை, செங்கலடி, மட்டக்களப்பு.)

ராஜசிங்கம் (ஆறுமுகம் திருச்செல்வம் - துறைநீலாவணை, மட்டக்களப்பு.)

விஸ்வலிங்கம் (செல்வராஜா சிவராஜா - அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.)

அருமை (யோகலிங்கம் நாகலிங்கம் - தம்பலவத்தை மண்டூர், மட்டக்களப்பு.)

நியூட்டன் (சுந்தையா தேவராசா - திக்கரை, களபூமி, காரைநகர், யாழ்.)

ரமேஸ் (சின்னத்துரை சபேசன் - கொற்றாவளை, அளவெட்டி வடக்கு, யாழ்.)

வானவர்மன் (தேவ அருள்வாசகம் குணசீலன் - சென்ஜேம்ஸ், இளவாலை, யாழ்.)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கணேஷ் (இராசதுரை ஜெயரத்தினம் - புளியங்குளம், ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு.)

நெல்லியடி முடக்காட்டுப் பகுதியில் இரவு நேரம் தமது இல்லத்தில் உறங்கிக் கொண்டிருந்தபோது பலாலி முகாமிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட எழுத்தாளர் (நெல்லை க. பேரன்), அவரது மனைவி, 7 வயது மகள், 15 வயது மகன் ஆகிய நான்கு தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4691)

மாணவன், யா / கொச்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவன்)

**மலர்வு: 27 - 02 - 1972 உதிர்வு 19 - 06 - 1989**

**திதி: 14 - 07 - 1992**

உன்னுயிர் பிரிவால் எம்முயிர் வாடினும்
எம்துயர் துடைப்பார் இம்மண்ணில் யாருள்ளார்?
உன்னுயிர் பிரிந்தும் உன்புகழ் பிரியா
அதிசயம் தான்எம் இதயத்தில் வாழும்
பொறுக்குமா எம் நெஞ்சம், தாங்குமா உன்மறைவை
தமிழ் மண்ணில் உதித்திட்ட உதயதாரகையே!

பெற்றோர், சகோதரர்கள்

73, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

(சி 4685)

'உமா வாசம்'
புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு,

## காணிவழங்க கோரி வேலை நிறுத்தம்

புசல்லாவ ரொச்செல் தோட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட காணிப்பகிர்வை ஆட்சேபித்தும் தமக்கும் காணி வழங்கப்பட வேண்டுமெனக் கோரியும் தமிழ்த் தொழிலாளர்கள் தொடர்ந்தும் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

மேற்படி காணிப் பகிர்வு பிரச்சினை தொடர்பாக நிலைமையை நேரடியாக அவதானித்து அறிக்கை சமர்ப்பிக்கவென உயர்மட்ட அரச அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று கடந்த வியாழக்கிழமை ரொச்செல் தோட்டத்திற்கு விஜயம் செய்து காணிப்பகிர்வை மேல்மட்ட முடிவு எடுக்கும் வரை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு கூறிச் சென்ற போதும் இரவிரவாக லொறிகளில் கட்டடப் பொருள்கள் கொண்டுவந்து இறக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர்உயர்கல்விவாய்ப்பு தேசியகல்விநிறுவகம்முயற்சி

ஆசிரியர்கள் தமது உயர் கல்வியைத் தொடர்வதற்கு உதவியாக வாய்ப்புக்களை அதிகரிக்கும் முயற்சியில் தேசிய கல்வி நிறுவகம் ஈடுபட்டுள்ளது என அதன் பணிப்பாளர்களில் ஒருவரான கே. சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

தொலைக் கல்வி அடிப்படையில் பட்டதாரிப் பட்டநெறிகளையும், கல்விமாணி, முதுமாணி நெறிகளையும் விரைவில் ஆரம்பிக்க இருப்பதாகவும் அதனால் வழங்கப்படும் சான்றிதழ் பல்கலைக்கழகப் பட்டங்களின் சான்றிதழ்களுக்குச் சமமாக எல்லாவிதத்திலும் கணிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிந்தனைக்கு

தவறு செய்வது எல்லா மனிதர்க்கும் இயல்பு, ஆனால், செய்த தவற்றில் முனைந்து நிற்பது மடையனின் தனி உரிமை.

— ஸிஸரோ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 14-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## வெற்றி கரமான முகாம் தகர்ப்பு

"சிறிலங்கா இராணுவத்திற்கு எதிராக மீண்டும் ஒரு பேரிழப்பை ஏற்படுத்தும் தாக்குதல் ஒன்றை தம்மால் நடத்தமுடியும் என்பதை விடுதலைப் புலிகள் மீண்டும் நிருபித்துள்ளனர்" என பி.பி.ஸி தெரிவித்தது. ஆனால், அதுமட்டுமல்ல, உலகில் செயற்பாடு மிக்க தலைமைத்துவத்தையும், தமக்கென தனித்துவமான போர்யுக்திகளையும், மனவுறுதி குன்றாத போராளிகளையும் கொண்டது விடுதலைப் புலிகள் இயக்கம் என்பதையும் உலகிற்கு வண்ணான்குளம் இராணுவ முகாம் மீதான தாக்குதல் மூலம் மீண்டும் உணர்த்தியுள்ளனர்.

'இரண்டாவது ஈழப்போர்' ஆரம்பமாகி சுமார் இரண்டு வருடங்களுக்கும் மேலாகியும் போர் தொடர்ந்தும் இடம் பெற்றுவருகின்றது. உலகில் நடைபெறும் ஏனைய விடுதலைப் போராட்டங்கள் போல் அல்லாது தொடர்ச்சியாக இடம் பெறும் மோதல்களினால் பல ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டும், பல ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தும் உள்ளனர். இவற்றில்சிலபெரும்நேரடிச்சமர்களாக அமைந்தன. சில முகாம் தகர்ப்புக்களாக, சிறிலங்கா இராணுவத்திற்குப் பேரிழப்பை ஏற்படுத்துபவையாகவும் இருந்தன. இந்த வரிசையில், கொக்காவில், மாங்குளம் ஆகிய முகாம் தகர்ப்புக்களுக்கு அடுத்து, இராணுவத்திற்குப் பேரிழப்பை ஏற்படுத்திய முகாம் தகர்ப்பாக வண்ணான்குள இராணுவ முகாம் தகர்ப்பு அமைந்திருந்தது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

இதேவேளை, ஏனைய இராணுவமுகாம்தகர்ப்பினைவிட இவ் இராணுவ முகாம் தகர்ப்பு சில விசேட அம்சங்களைக் கொண்டிருந்தது. இவ் இராணுவ முகாம் தகர்ப்பு, இடம்பெற்ற காலப் பகுதி மிகவும் முக்கியமானதாகும். கொக்காவில், மாங்குளம் முகாம் தகர்ப்புக்கள் இடம்பெற்ற காலப்பகுதி இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமாகிய காலப்பகுதியாகும். இக்காலப்பகுதி விடு

## —காங்கிரஸ் கட்சியின்—
# ஒரு வருட ஆட்சியும் உருவாகும் எதிர்ப்புகளும்

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவின் சிறுபான்மை அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றைஇந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான தீவிர வலது சாரிக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி கொண்டு வந்துள்ளது.

பெருந் தொகையான நிதி ஊழல் பஞ்சாப், காஷ்மீர் மாநிலங்களில் ஏற்படும் பிரிவினைவாத பயங்கரவாதத்தைப் பிரதமர் ராவ் கையாளும் முறையை எதிர்த்தே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவதாக பாரதீய ஜனதாக் கட்சி தெரிவிக்கின்றது.

ஓராண்டிற்கு முன்னர் ராஜீவின் மறைவிற்குப் பின் காங்கிரஸ் தலைவராகி லோக சபையில் அறுதிப் பெரும்பான்மையை பெறத் தவறிய சிறுபான்மை காங்கிரஸ் அரசின் பிரதமரான ராவ் தமது பதவியேற்பின் பின் பத்திரிகையாளர் மாநாடொன்றைக் கூட்டியிருந்தார்.

அம் மாநாட்டில் ஊழல்களுடன் அமைச்சர்கள் தொடர்புபட்டிருக்கின்றனர் என்று தெரிய வந்தால் அவர்கள் பதவி விலக்கப்படுவர் எனவும், பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தொடரும் எனவும் இரு உறுதிமொழிகளையும் வழங்கியிருந்தார்.

பிரதமர் உறுதிமொழி வழங்கிய சில நாட்களின் பின் நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் அரச வங்கிகள், நிதி நிறுவனங்கள், வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து சுமார் 3078 கோடி ரூபாவிற்கு மேற்பட்ட பணத்தொகையைச் சட்டவிரோதமாக மத்திய அமைச்சர்கள் எவரும் பெற்றுக் கொண்டதற்கான சாட்சியங்கள் எதுவும் இல்லையெனக் குறிப்பிட்டார்.

ஆனால் கடந்த வாரம் எழுந்த விமர்சனங்களிலிருந்து பல அரசியல்வாதிகள் இந்த ஊழல் விவகாரங்களுடன் தொடர்பு இருப்பதாக கூறப்படுகிறது. இவை தொடர்பாக இவ்வார பாராளுமன்ற அமர்வுகளில் இடதுசாரிக் கட்சிகளும், ஜனதா தளமும் கேள்விக் கணைகளைத் தொடுக்கும் என அறியப்படுகிறது.

நிதியமைச்சர் மன்மோகன் சிங் ராஜினாமா செய்யவேண்டும். மூவாயிரம்கோடி ரூபா பங்குச்சந்தை ஊழலை அவர் தவறாகக்கையாண்டுவருவதாகவும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குரல் எழுப்பி வருகின்றன.

ஆனால் எதிர்க்கட்சிகளின் மிரட்டல்கள் குறித்து ராவின் அரசு அஞ்சியதாக தெரியவில்லை. ஆளும் காங்கிரஸ் வெகுவிரைவில்அறுதிப்பெரும்பான்மையைப் பெறும் என சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார் ஜனதா தளத்திலிருந்து பிரிந்து சென்ற சில குழுக்களின் ஆதரவை திரட்டுவதில் நரசிம்மராவ் நம்பிக்கை கொண்டிருப்பதாக கிடைக்கும் சில செய்திகள் அந்த அமைச்சரின் கூற்றை ஊர்ஜிதம் செய்கின்றன.

அரசின்மீது பாரதீய ஜனதாக்கட்சி கொண்டுவரும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றியளிக்காதென்ற தொனியிலேயே காங்கிரஸ் வட்டாரங்கள் கருத்து வெளியிடுகின்றன.

இதேவேளை கடந்தவாரம் ஆறுபுதிய அமைச்சர்களை நியமித்துள்ள ராவ் தமது அமைச்சரவை அந்தஸ்துள்ள மாற்றம் எதனையும் செய்யவில்லை. ஆனால் விரைவில் மந்திரிசபையை மாற்றி அமைக்கலாம் என ஊகங்கள் அடிபடுகின்றன. எனினும் தற்போதைய அமைச்சரவை நியமனங்கள் ஓர் 'தற்காலிக அதிகரிப்பு' என்ராவ் கூறியுள்ளார்.

சிலர் பிரதமர் தமதுஅமைச்சரவை விஸ்தரிக்காமல் இம் மேலதிக நியமனங்களைச் செய்திருப்பதாக கருத்துத் தெரிவிக்கும் அதேவேளை வேறுசிலர் விரைவில் பெரிய தொரு மாற்றத்தை ராவ் மேற்கொள்வார் எனவும் கருதுகின்றனர்,

இதேவேளை அமைச்சரவையை மாற்றி அமைக்காமல் மேலதிக அமைச்சர்களை ராவ் நியமித்தமை காங்கிரஸ் கட்சி அங்கத்தவர்கள் மத்தியில் ஓர் ஏமாற்றத்தையே தந்துள்ளது. அத்துடன் இப் புதிய நியமனங்கள் யாவும் லோகசபை அங்கத்தவர்கள் மத்தியில் இருந்தே தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். ராஜ்யசபை உறுப்பினர்களில் இருந்து புதிய அமைச்சர்கள் எவருமே தெரிவாகவில்லை.

ஏற்கனவே தமிழ்நாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் இல்லையென்ற குறையும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நரசிம்மராவின் அரசாங்கம் தனது ஓராண்டு கால பதவிக் காலத்தில் அதிகாரிகள் மத்தியில் பல மாற்றங்களை மேற்கொண்டு வந்தபோதும் அது வாக்குறுதி அளித்தமை போன்று சீர்திருத்த நடவடிக்கைகளின் வளர்ச்சி வீதம் போதாதென்பதே ஒரு சாராரின் கருத்தாகும்.

# யூகோஸ்லாவிய போரில் மேற்கின் இராணுவத்தலையீடு

(ஹெல்சிங்கி)

யூகோஸ்லாவியா சிவில் யுத்தத்தில் மேற்கு நாடுகள் ராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் சாத்தியம் அதிகரித்து வரும் நிலையில் 52 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய பாதுகாப்பு மாநாடு புதிய சமாதான முயற்சி ஒன்றை மேற்கொண்டிருக்கிறது.

பின்லாந்து தலைநகர் ஹெல்சிங்கியில் பாதுகாப்பு ஒத்துழைப்பு சம்பந்தமான ஐரோப்பிய உச்சி மாநாடு இரண்டு நாள் நடைபெற்றபின் முடிவுற்றது.

ஆனால்சரஜீவோவுக்கு நிவாரணம் வழங்க ராணுவத் தலையீடு மேற்கொள்வதுபற்றியும் சேர்பியாவைத் தண்டிப்பது பற்றியதுமான பேச்சுக்களினால் உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் மங்கிய நிலையில் காணப்பட்டது.

மேற்கு ஐரோப்பிய யூனியன், நேட்டோ ஆகியவற்றின் வெளிநாட்டு பாதுகாப்பு அமைச்சர்கள் சேர்பியா மீது பொருளாதாரத் தடையை இறுக்க அட்ரியாட்டிக்கடலில் கடற்படைக் கண்காணிப்புக்கு இணக்கம் தெரிவிப்பார்கள் எனத் தெரிகிறது. யூகோஸ்லாவியாவுக்கப்பால் அட்ரியாட்டிக் கடலில் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் ஏற்கனவே பிரவேசித்துள்ளன.

சரஜீவோவுக்கு நிவாரணம் செல்ல பாதை ஒன்றைத் திறப்பது குறித்தும் அமைச்சர்கள் விவாதிக்கவுள்ளனர்.

ராஜீவ் கொலை விசாரணை;

## 46 இலட்சம் செலவில் நீதிமன்றம் புனரமைப்பு

(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை விசாரணை இன்னும்ஆறுவாரங்களில் பூரைமலைநீதிமன்றத்தில் ஆரம்பமாகும் என்றுஎதிர்பார்க்கப்படுவதாகதெரிவிக்கப்படுகிறது.

இதற்காக பூரைமலை சிறைக் கூடத்திற்கு அருகே இருக்கும் இரு மஜிஸ்ரேட் நீதிமன்றங்களும் 46 இலச்சம் ரூபாய் செலவில் மீளமைக்கப்படுகிறது என்றும்,

அடுத்தமாத மத்திய பகுதிக்கு முன்னர் மீள அமைப்பு வேலைகள் முடிந்துவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்புச்சபைக் கூட்டம்; மண்டேலா பங்குபற்றுவார்?

(நியூயோர்க்)

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நாளை நடைபெறவுள்ள

காங்கிரஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

## பதவி உயர்வுக்கான போட்டிப்பரீட்சை

அரச திணைக்களங்களில் கடமையாற்றும் கனிஷ்ட ஊழியர்களைப் பதவியுயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. லிகிதர் தரம் II பிரிவு "ஆ", தமிழ் தட்டெழுத்தாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் கனிஷ்ட ஊழியர்களிலிருந்து நிரப்பப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள சிற்றூழியர்களில் தகைமையுள்ளவர்கள் இப்பதவியுயர்வுக்கான பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. விபரங்கள் 26-6-92 ஆம் திகதி வர்த்தகமானியில் வெளியாகியுள்ளன. (24)

## பதவி உயர்வில் முறைகேடு தொழிற் சங்கம் ஆட்சேபம்

(கொழும்பு)

சுங்கத்திணைக்களத்தில் வழங்கப்பட்ட பதவி உயர்வுகளில் வழமையாகக் கவனிக்சப்படும் சேவை மூப்பு மற்றும் திறமை ஆகியன கவனிக்கப்படவில்லை என்று சங்கத் திணைக்கள உத்தியோகத்தர்கள் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளனர்.

இப்பதவி உயர்வுகளுக்கு ஆட்சேபம் தெரிவிதது 800 உறுப்பினர்களைக் கொண்ட சுங்க உத்தியோகத்தர்கள் சங்கம் திறைசேரியின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கத்திற்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கையால் சுங்கத்திணைக்களத்தில் வேலைகள் ஸ்தம்பிதமடைந்து விடும் என்றும் அந்தப் பேச்சாளர் கூறினார்.

சென்ற ஆண்டு சுங்கப்பணிப்பாளர் லலித் ஹீகைமவுக்கு எதிராக சுங்க உத்தியோகத்தர்கள் சங்கம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கது.

### கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள கால்நடைத்தீவன உற்பத்தியாளர்களுக்கான கூட்டம் இன்று (14 - 07 - 1992) செவ்

இதேவேளை, ஏனைய இரா... பினைவிட இவ் இராணுவ முகாம் தகர்ப்பு சில விசேட அம்சங்களைக் கொண்டிருந்தது. இவ் இராணுவ முகாம் தகர்ப்பு, இடம்பெற்ற காலப் பகுதி மிகவும் முக்கியமானதாகும். கொக்காவில், மாங்குளம் முகாம் தகர்ப்புக்கள் இடம்பெற்ற காலப்பகுதி இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமாகிய காலப்பகுதியாகும். இக்காலப்பகுதி விடுதலைப் புலிகள் மிகவும் பலமாகவுள்ளனரென எதிரி கருதியகாலப்பகுதியாகும். ஆனால், வண்ணான்குள இராணுவ முகாம் தகர்ப்பானது விடுதலைப் புலிகள் முற்றுகையிடப்பட்டு விட்டார்கள், பலவீனப்பட்டு விட்டார்கள் என எதிரியும், பல அரசியல் விமர்சகர்களும் பலரும் கருதிய காலப் பகுதியாகும். இந்நிலையில், விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இத்தாக்குதலானது அரசியல் அவதானிப்புக்கள், கணிப்பீடுகள் என்பனவற்றைப் பொய்ப்பித்துப் போகச் செய்த ஒரு தாக்குதலாகும்.

மேலும், வண்ணான்குள இராணுவ முகாம் புலிகளின் தாக்குதலுக்கு 30 நிமிடங்கள் கூடத் தாக்குப் பிடிக்கவில்லை. அதாவது இம்முகாம் தகர்ப்பு ஒரு அதிரடித் தாக்குதல் போன்றே இடம் பெற்றது. ஏறத்தாழ கொக்காவில் இராணுவ முகாம் போன்ற விஸ்தீரணத்தையும், பலத்தையும்கொண்டிருந்த இவ்இராணுவமுகாம் புலிகளின் முப்பது நிமிடத்தாக்குதலுக்குள் வீழ்ச்சி காண்பதென்பது தாக்குதலின் கடுமையைக் காட்டுவதாகவே இருந்தது. அதாவது புலிகள் ஓர் கடும் தாக்குதலை ரோந்து அணிகள் மீதுமட்டுமல்ல, ஓர் பலம் பொருந்திய இராணுவமுகாம் மீதும் மேற்கொள்ளக் கூடிய பலம் கொண்டவர்களாகவே உள்ளனரென்பதையேஇதுநிருபிப்பதாகஇருந்தது.

மறுவளமாக, ஐம்பத்திரண்டிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதும், பலரை படுகாயப்படுத்தியதுமான இத்தாக்குதலில் புலிப்படை வீரர்கள் அறுவர் மட்டுமே வீரச்சாவைத் தழுவிக் கொணடனர். இதுவரை புலிகள் மேற்கொண்ட முகாம் தகர்ப்பு நடவடிக்கைகளில் வீரச்சாவடைந்த போராளிகளின் எண்ணிக்கையின் சாவைவிட இது மிகக் குறைவானதாகும். அதாவது, குறைந்த இழப்புடன் இராணுவத்திற்கு பேரிழப்பை ஏற்படுத்திய வெற்றிகரமான தாக்குதல் இதுவாகும்.

இந்நிலையில், இத்தாக்குதல் இராணுவ, அரசியலில் முக்கியத்துவத்திற்குரியதாகும். இத்தாக்குதலின் தார்ப்பரியங்களை சிறிலங்கா இராணுவத்தரப்பும், அரசியற்தரப்பும் அசட்டை செய்யுமேயானால், இதே வழியில் மேலும் பல இழப்புக்களை அவர்கள் சந்திக்க வேண்டிவரினும் ஆச்சரியம் எதுவுமில்லை.

## பாதுகாப்புச்சபைக் கூட்டம்; மண்டேலா பங்குபற்றுவார்?

(நியூயோர்க்)

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நாளை நடைபெறவுள்ள தென் ஆபிரிக்கா சம்பந்தமான விவாத்ததில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் தலைவர் மண்டேலா மற்றும் ஒன்பது ஆபிரிக்க வெளிநாட்டு மந்திரிகளுடன் கலந்து கொள்வார் என ராஜ தந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால்மண்டேலாவின் விஜயம் குறித்து இன்னும் தங்களால் ஊர்ஜிதப்படுத்த முடியாது என ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

போதைவஸ்து கடத்தல் குற்றச்சாட்டு

## பனாமா மாஜி தலைவருக்கு 40 ஆண்டுகள் சிறைவிதிப்பு

(மியாமி)

போதை மருந்து கடத்தல் மற்றும் விற்பனை தொடர்பாக அமெரிக்க நீதிமன்றம் ஒன்று பனாமாவின் முன்னாள் தலைவர் ஜெனரல் நொறியேகாவிற்கு நாற்பதாண்டு கால சிறைத்தண்டனை விதித்துள்ளது. கோகெயின் என்னும் போதைப்பொருளை பனாமா மூலம் அமெரிக்காவிற்கு கடத்த கொலம்பியாவைச்சேர்ந்த போதை மருந்து கடத்தல் காரர்களுக்கு பனாமாஉதவியதாக மியாமியில் நடந்தநீண்ட விசாரணையில் ஜெனரல் நொறியேகாமீதுகுற்றம் சாட்டப்பட்டு இருந்தது.

1989 ஆம் ஆண்டு பனாமாவை முற்றுகையிட்ட அமெரிக்கத் துருப்புக்கள் ஜெனரல் நொறியேகாவை அமெரிக்காவிற்கு பிடித்துச் சென்றன என்பது தெரிந்ததே.

## பாகிஸ்தானில் வன்முறை; 9 பேர் கொல்லப்பட்டனர்

பாகிஸ்தானில் பல நகரங்களில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பல ஊர்வலங்கள் மேல் நடத்தப்பட்ட வன்முறைச் சம்பவங்களில் ஒன்பது பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகளால் மேற்கொள்ளப்பட்ட ஊர்வலங்களைப் பொலிசார் தடுத்து நிறுத்த முற்பட்டபோது ஏற்பட்ட வன்முறைகளிலேயே ஒன்பது பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

...படுகிறது என்றும்,

அடுத்தமாத மத்திய பகுதிக்கு முன்னர் மீள அமைப்பு வேலைகள் முடிந்துவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள்வங்கி இலங்கைவங்கி

## வங்கிச் செயற்பாட்டிற்கு சுதந்திரம் வழங்கப்பட்டது

(கொழும்பு)

திறைசேரி மற்றும் பொது நிர்வாக அமைச்சு சுற்று நிருபங்களிலிருந்து அரச வங்கிகளான மக்கள் வங்கிக்கும், இலங்கை வங்கிக்கும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும் வங்கிகளைக் கட்டுப் படுத்தும் இல:38, 1971 ஆம் ஆண்டு நிதிச் சட்ட விதிகள் சிலவும் தளர்த்தப்பட்டுள்ளன.

இந்த இரு வங்கிகளும் வர்த்தக அடிப்படையில் தமது கொடுக்கல்-வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழிசெய்யும் வகையில் வங்கிகளின் செயற்பாட்டுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கிறது. சர்வதேச தரத்துக்கு வங்கிகளைப் புனரமைப்பதென்ற அரசின் முடிவுக்கு ஏற்பவே இந்த நடவடிக்கை ஆகும்.

## இராணுவ அதிகாரியின் சகோதரன் குத்திக் கொலை

(கொழும்பு)

ஓய்வுபெற்ற இராணுவப் பிரிகேடியரான ஹென்றி சி. அத்து கோரளேயின் சகோதரர் றிச்சாட் அத்துகோரள (69 வயது) கொழும்பு மருதானையிலுள்ள அவரது வீட்டில் வைத்து கத்தியால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார். அவரது காரும்காணாமல்போயுள்ளது. பெரும் செல்வந்தரான றிச்சாட் அத்துகோரளயின் மனைவியும், இரு புதல்வர்களும், சுவீடனில் வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## செஞ்சிலுவை உத்தியோகத்தர்கள் பதவி துறப்பு

(வேலணை)

சிறிலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் தலைவர் வைத்திய கலாநிதி செல்லையா சுரேந்திரன்நச்சினார்கினியனும் செயலாளர் சிவானந்தராசாவும்தமதுபதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளதாக நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற யாழ்ப்பாண கிளையின் நிர்வாக சபைக்கூட்டத்தில் நிர்வாகிகள் மத்தியில் தெரிவித்துள்ளார்கள்.

ஏனைய பதவிகளில் உள்ள உபதலைவர் ஜி. இராசேந்திரா பொருளாளர் கே. சற்குணலிங்கம் ஆகியோர்கள் இக்கூட்டத்தில் சமுகம் அளிக்காது இருந்த பொழுதிலும் கூட அவர்களும் தமது பதவிகளில் இருந்து இராஜினாமா செய்துள்ளதாகவும் தலைவர் தெரிவித்துள்ளார். (14)

...ஆட்சேபம் தெரிவித்தது 800 உறுப்பினர்களைக் கொண்ட சுங்க உத்தியோகத்தர்கள் சங்கம் திறைசேரியின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கத்திற்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர் சிலர் அடிப்படை உரிமை மீறல் சட்டத்தின் கீழ் வழக்குத்தாக்கல் செய்ய உள்ளதாக தொழிற் சங்கப் பேச்சாளர் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நட...

கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள கால்நடைத்தீவன உற்பத்தியாளர்களுக்கான கூட்டம் இன்று (14 - 07 - 1992) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தாவடியிலுள்ள தமிழீழ ஆய்வு நிறுவன மையப் பணியகத்தில் நடைபெறவுள்ளது, சகல கால்நடைத்தீவன உற்பத்தியாளர்களும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

முதலுக்கு மேலாக

## மூன்றாம் உலக நாடுகள் வட்டி செலுத்துகின்றன

(கொழும்பு)

மூன்றாம் உலக நாடுகளுக்கு (இலங்கை உட்பட) வளர்ச்சி அடைந்த நாடுகள் வழங்கிய கடன்களுக்கு வட்டித்தொகை மட்டும் கடந்த எட்டு ஆண்டுகளில் 1,28.950 கோடிசெலுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த வட்டித் தொகை எவ்வளவு கடனுக்குத் தெரியுமா?1,26.520 கோடி டொலர்களுக்கு மட்டுமே. அதாவது இதுவரை செலுத்தப்பட்ட வட்டியை விட பெற்றுக் கொண்ட முதல் குறைவு இன்னும் முதல் போய்ச்சேரவில்லையாம்.

## இறி மாணவர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவ மாணவர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இன்று 14 ஆம் திகதி காலை 8.30 முதல் மாலை 4.00 மணி வரை புனித பத்திரிசியார் கல்லூரி சுமித் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் ஆவணிமாதம் நடைபெறவுள்ள உயர்தர பரீட்சையில் கிறிஸ்தவத்தை ஒரு பாடமாக கற்கும் பரீட்சார்த்திகளை பரீட்சைக்கு தயார் செய்யும் வகையில் இளைஞர் உருவாக்கல் இயக்கத்தால் இக்கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவநாகரிகத்துறைப் பிரிவு விரிவுரையாளர்கலாநிதி அருட்திரு ஏ. ஜே. வி. சந்திரகாந்தனால் நடாததப்படவுள்ள இக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தமக்கான மதிய உணவையும் எடுத்துவரல் வேண்டும் என அதன் தலைவர் அறிவித்துள்ளார். (ச)

## மட்டக்களப்பு வாவியில் மீனினம் அருகி வருகிறது

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள கண்டல் மரங்களை வெட்டுவதாலும்அவை அழிந்து போவதாலும் வாவியில் மீன் இனப்பெருக்கம் குறைவடைந்து வருவதாகமட்டக்களப்பு மாவட்ட உதவி ஆணையாளர் எஸ், புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

உலக சுற்றாடல் தினத்தை யொட்டி மட்டக்களப்பு கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்துஉரையாற்றுகையில்சூழலைப்பாதுகாப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் பல பயனுள்ள திட்டங்களை பாதுகாப்பு அபிவிருத்தி அதிகாரசபை தயாரித்துள்ளதாகவும் தெரிவித்தார்,

# ஈழநாதம்

## 'ஹெலஉறுமய' அமைப்பு குறித்து சுதந்திரக்கட்சிக்குள் அச்சம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஒரு குழுவாக இயங்கும் ஹெல உறுமயவின் நடவடிக்கை குறித்துக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கவலை வெளியிட்டுள்ளார். ஹெலஉறுமய ஏற்கனவே சிறுபான்மை இனங்கள் எதிர்ப்பு இயக்கமாக செயற்பட்டு வருவது தெரிந்ததே.

கட்சியில் சிறிமாவோவின் தலைமையை முறியடிப்பதற்காக ஹெல உறுமய ஆரம்பிக்கப்பட்டது எனவும் அனுரா பண்டாரநாயக்கா இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி வேட்பாளரை நீக்க முயற்சித்து வருவதாகவும் சுதந்திரக்கட்சி தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் பாதயாத்திரை மற்றும் ஜனகோஷம் போராட்டங்களை முன்நின்று நடத்திய மகிந்தராஜபக்ஷ பற்றியும் கட்சியின் தலைமை கவலை கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவருக்கு இடதுசாரி இளைஞரின் ஆதரவு அதிகரித்துவருவது குறித்தும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

## ஒரு கோடி பெறுமதியான உணவுப் பொருள் மோசடி

(கொழும்பு)

களஞ்சிய சாலைகளில் ஒரு கோடி ரூபா பெறுமதியான அரிசி மற்றும் மாவு மோசடியை உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சு கண்டுபிடித்துள்ளது.

கந்தளாய் களஞ்சிய சாலைகளிலிருந்து மோசடி செய்து சுமார் 4,603 மெற்றிக்தொன் அரிசியும், 128 மெற்றிக் தொன் மாவும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. இவற்றின் பெறுமதி 76 லட்சம் ரூபாவுக்கு அதிகமானதாகும். நுவரெலியா களஞ்சியசாலையிலிருந்து 150 மெற்றிக் தொன் மா மோசடி செய்து வெளியே கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டிலிருந்து இவ்வாறான மோசடிகள் இடம் பெற்று வந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்ற மோசடி ஒன்று பதுளை உணவுக் களஞ்சிய சாலையில் உரிய நேரத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ரத்மலானை, நாரன்பிட்டியா, கட்டுகஸ்தோட்டை திருக்கோணமலை, கந்தளாய் நுவரெலியா ஆகிய களஞ்சிய சாலைகளில் கடந்த சில வருடங்களில் இவ்வாறு மோசடிகள் இடம் பெற்றுள்ளன. இதில் சம்பந்தப்பட்டஉணவுப் பொருள்களின் பெறுமதி 2 கோடியே 70 லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

## அவசர கூட்டம்

பளைக் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களை நாளை புதன் கிழமை காலை 10.00 மணிக்கு கிளி/வேம்பொடுகேணி சி.சி. த.க.பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு கொத்தணி அதிபர் வேண்டுகிறார்.

## சிதம்பர பொலிஸார் பெண்மீது வன்முறை

(சென்னை)

சிதம்பரம் பொலிஸ் நிலையத்தில் ஒரு சில பொலிஸ்காரர்களால் தான் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டும் பத்மினி என்பவர் இது சம்பந்தப்பட்ட விசாரணையை மத்திய புலனாய்வுத்துறை விசாரிக்க வேண்டும் என்றும், தனக்கு நஷ்டஈடாக ரூபா 5 லட்சம் வழங்க வேண்டும் என்றும் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கோவிந்தசாமி இது தொடர்பாக மாநில அரசுக்கு அழைப்பாணை அனுப்புமாறு கட்டளை பிறப்பித்தார், விசாரணை நாளை ஆரம்பமாகும்.

## 13 வயதுச் சிறுவன் பட்டதாரியானான்

(லண்டன்)

பதின்மூன்று வயதுச் சிறுவன் ஒருவர் பிரிட்டனில் மிக இளைய பல்கலைக் கழகப் பட்டதாரியாகத்தேறியிருக்கிறார் கணேஸ் சிற்றம்பலம் என்ற இலங்கை வழித்தோற்றலான இச் சிறுவன் கணிதச் சிறப்புக் கற்கை நெறியில் முதல் பிரிவில் சித்தியடைந்திருக்கிறார்

சரே பல்கலைக் கழகத்தில் வாரத்துக்கு ஒருதடவை மூன்று ஆண்டுகளாகப்பாடம் பயின்று வந்த கணேஸ் பிரிட்டனில் சாதாரண மற்றும் உயர்தர பின்லி இறுதித் தேர்வுகளில் சித்தி எய்திய ஆகக் குறைந்த வயதினர் என்ற சாதனையையும் முன்பு ஏற்படுத்தியிருந்தார்.

## சொற்பொழிவு

(கொழும்புத்துறை)

யாழ். கந்தர்மடம் ஸ்ரீசிவ குருநாகுருபீடம் வேதாந்த மட பரிபாலன சபையினர், ஒவ்வொரு மாதமும் வரும் பூரணை தினத்தன்று பிற்பகல் 3.30 மணிக்குச் சமயச் சொற்பொழிவுகளை நடாத்த ஒழுங்குகளைச்செய்துள்ளனர்.

பூரணை தினமான இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு இச்சமயச் சொற்பொழிவு நடைபெறும். (24)

## கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் விஷேட பொதுக் கூட்டம் இன்று 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வை. எம். எச். ஏ. பணிமனைக்கு அருகில் உள்ள யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சமாசத் தலைவர் திரு. டானியல் அன்ரனி தலைமையில் நடைபெறும்.

சகல சனசமூக நிலையங்களின் மகளிர் அமைப்புப் பிரதிநிதி ஒருவரும், மொத்தம் 3 உறுப்பினர்களை இக்கூட்டத்திற்குத் தவறாது சமுகம் தரும் வண்ணம் கோரப்பட்டுள்ளது. (24)

## யாழ். செஞ்சிலுவை விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் விசேட பொதுக் கூட்டம் ஆகஸ்ட் மாதம் 30-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை 9.30 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெறும்.

கிளை செயற்குழு உறுப்பினர் தெரிவுக்கான நியமனங்கள் அடுத்தமாதம் 10-ம்திகதி முதல்20-ம்திகதிவரைபிற்பகல் 4 மணிவரை மேற்படி பணிமனையில் ஏற்றுக்கொள்ளப்படும். படிவங்களை 10 ரூபா செலுத்திப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## 'சாளரம்' வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யூலை - ஆகஸ்ட் மாதங்களுக்குரிய சாளரம் சஞ்சிகை வெளிவந்துள்ளது.

இச் சஞ்சிகைப் பகுதியில் சாரணன் எழுதிய 'சந்தர்ப்பத்தை தவறவிட்ட பிரேமதாசா' எனும் உள்ளூர் அரசியல் கட்டுரையும் குமாரவேல் எழுதிய 'கல்வி நிறுவனங்கள் பற்றிய பார்வை' எனும் கட்டுரையும் யேசுராசா எழுதிய 'எங்கள் மண், எங்கள் எழுத்தாளர் எங்கள் நூல்கள்' எனும் கட்டுரையும் வேறும் பல விஞ்ஞான, மரு

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப் பிறப்பு 21 — 01 — 1970

வீரச் சாவு 14 — 07 — 1991

### மாவீரன் லெப். சந்திரன்

( சங்கரப்பிள்ளை அன்பரசன் )

மானிப்பாய்

தேசத்தின் மீது கொண்ட நேசம்
தேச விடுதலை வேண்டி நின்று
உயிரையும் கொடுத்திட
உள்ளத்தில் கொண்ட உறுதி
பாரினில் '' தமிழீழம் '' என்றொரு நாடு படைத்திட
போரினில் இவன் களத்திறமை கட்டைக்காட்டினிற் கண்டோம்,
தமிழீழ தேச நிர்மாணத்தில் இவன் பணிகள்
தமிழீழ ஆய்வு நிறுவன ''யுனிரெக்கின்'' வளர்ச்சியிற் கண்டோம்,

## 31-ம் நாள் நினைவஞ்சலி

கோற்றம்



மறைவு

## 1-ம் ஆண்டில் நெஞ்சத்தின் அஞ்சலிகள்

(14. 7. 91ல் வீரமரணமடைந்த அனைத்து போராளிகளுக்கும்)



தமிழீழ மண்ணில் 26· 05· 1967

தமிழர் மனங்களில் 14· 07· 1991

### லெப். கேணல் சூட்டி

(இராசு செல்வேந்திரன்)

வீரம் எனும் தோப்பினிமல - பெரு விருட்சம் ஒன்று சாய்ந்தது
வீடு என்ற கூட்டினிலே நான்கு தூணில் ஒன்று சரிந்தது
வீரம் சரிந்த இடத்தில் இருந்து எழுந்து கனலும் உனது துப்பாக்கி
ஒலியில் தினமும் நினைவை சுமந்து புதிய உலகை விரைவில் படைப்போம்

03. 07. 1992ல் நடைபெற்ற 1-ம் ஆண்டு திதி வைபவத்தில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்

கெருடாவில், -குடும்பத்தினர்
சாவகச்சேரி.

(சி4692)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கண்டோம்,
தமிழீழ தேச நிர்மாணத்தில் இவன் பணிகள்
தமிழீழ ஆய்வு நிறுவன ''யுனிரெக்கின்'' வளர்ச்சியிற்
கண்டோம்,

சந்திரனே !
உன் நினைவுகள் எங்கள்
உள்ளத்தில் நிழலாய்த் தொடர,
உன் பணி தொடர்வோம் - நாளைய விடியலில்
உன் தமிழீழக் கனவு நிச்சயம் நனவாகும், நம்பு

(சி/ 4694) - தமிழீழ ஆய்வு நிறுவனம் -

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



### மேஜர் லவன்
(துரைசிங்கம் ராஜ்சங்கர்)

வீரப்பிறப்பு: 21-04-1968 வீரச்சாவு 14-07-1991

கொழும்பு மாநகர் குழுகுழு ஏசியில்
கொள்கையை மறந்து குலவி வாழ்ந்திட
இவனது இதயம் மறுத்தது
இனவிடுதலை கேட்டது
உறவைத் துறந்தான், இன உணர்வை ஏற்றான்
உயர்ந்தது வாழ்வினில் இலட்சியம் என்றான்
விடுதலை வேள்வியில் வீரனாய் இணைந்தான்
விடியலின் முன்பே மாவீரனாய் ஆனான்
இவனது பாதையில் என்றும் தொடர்வோம்
இறுதி இலட்சியம் வெல்லும் வரைக்கும்
இந்நாளில் நினைவு கூரும்

(சி/4693) நண்பர்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தோற்றம்
14
|
08
|
1955



மறைவு
14
|
06
|
1992

### திருமதி கெங்காதேவி துரைராஜசிங்கம்

பைங்கிளி வாவென்று பங்கயச் செல்வியுனை
அங்கைகள் நீட்டி அழைத்தாளோ - பொங்குபுகழ்
மங்கை கெங்காதேவி நீ வானுலக வாழ்வுபெறவோ
இங்கிருந் தேகினாய் இன்று.

இந்து மகளிர் லேன்,
கந்தர்மடம்.

க. துரைராஜசிங்கம்
கணவன், பிள்ளைகள்.
[சி/4697]

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

**13. 07. 1992**

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்:- 4872

வடபகுதிக்கு வெளியே அனுமதித்தவாகனஇலக்கங்கள்:-
42-2862, 28-4362, 26-9132, 41-9791, 27-2761, 41-9764, 41-3931, 40-7299, 24-5461, 22-1364, 24-7623, 42-9325, 24-9646, 36-2837, 36-9272, 24-4707, 26-1791, 27-5187, 42-7312, 24-5036, 25-546, 37-293, 36-6996, 25-3302, 36-8312, 22-8175, 36-6155, 36-6880, 70-7575.

வட பகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-
28-8589, 28-1111, 27-3125, 41-7109, 27-5945, 26-0711, 24-8212, 26-6628, 28-9927, 24-9390, 27-4673, 42-4126, 42-3615, 26-0516, 27-6821, 26-9158, 27-5633, 26-3667, 27-7281, 41-8875, 42-2364, 42-295, 26-1602, 24-5087, 26-6320, 24-1209, 24-0529.

எழுதிய 'எங்கள் மண், எங்கள் எழுத்தாளர் எங்கள் நூல்கள்' எனும் கட்டுரையும் வேறும் பல விஞ்ஞான, மருத்துவ அம்சங்களையும் தாங்கி மாத சஞ்சிகையான சாளரம் வெளிவந்துள்ளது.

### சீன எவ்-7

தாக்குதல் ஆயுதமாக இருக்கிறது.

ஆனால் எவ்-7 ரக யுத்த விமானங்கள் எதிரியின் மனோரீதியான பாதிப்பை ஏற்படுத்தவே பயன்படக்கூடியவை.

அத்துடன் வெளிநாடுகள் சிறிலங்கா மீது ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்டிருப்பின் அவற்றைத் தவிர்க்க இவை உதவும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கொழும்பு

கொழும்புக்கு உத்தியோக பூர்வ பயணமொன்றை மேற்கொள்கின்றனர்.

இவர்கள் தங்களுடன் ஆரம்ப ஆசிரியர் போட்டிப் பரீட்சையின் விடைத்தாள்களையும் எடுத்துச் செல்கின்றனர். மற்றும் நடைபெற இருக்கும் 92 ஆம் ஆண்டுக்கான க. பொ. த. (உ த) பரீட்சைக்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் இவர்களுடைய பயணம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (பா)

### தண்ணீரூற்றை

யில் தங்கியிருந்த தமிழ்மக்கள் இந்த எறிகணைவீச்சுக்களால் ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளைநோக்கி இடம்பெயர்ந்துள்ளனர்.

### சுடப்பட்ட

கேணல் முனசிங்கா தெரிவித்துள்ளார். மேலும் இக் கறுப்புப் பெட்டி அகற்றப்பட்டதனால் விமானம் வெடித்து விழுந்து நொருங்கியதற்கான சரியான காரணத்தை அறிய முடியாதிருக்கிறது எனவும் கூறியுள்ளார்.



### 2-ம் லெப்ரினன்ட் கடற்புலி பழனி
(அந்தோனிபபிள்ளை – அருள்தாஸ்)

வீரஜனனம் 17-12 1973 வீரமரணம் 14-07-1991

நீயில்லை நானுண்டு நின்புகழ்
ஊர்கண்டு நிலைத்துத்தான் மகிழவில்லை
கொடுங்கடலில் மடியவில்லை - நீ
கொடுமைதனைப் பொறுக்கவில்லை
சுடுமணலில் பெரும் படையை
சுட்டொதுக்க நீ சென்று
படு களத்தில் குண்டேந்தி
பாயினிலும் நோயினிலும்
படுக்கையிலும் தீயினிலும் சாகாது
தீன் தமிழின் வீரத்தாய் ஆக்கிவிட்டாய் உன்தாயை
வீரனவன் நீயன்றோ மார்பினிலே
நோப்பட்டு நொடிந்திட்ட மலர்போல
சாவினிலே படைத்து விட்ட
சரித்திரம் தான் என்ன சொல்வேன்.

பழம் நீ பழனி — ஈழக்
களத்தில் தனி நீ தலைவன்
எய்திட்ட கணை நீ
எம் நாட்டை உயர்த்திட்ட பழனி

அருள்தாசின் ஆத்ம சாந்திக்காக பருத்தித்துறைமுனை புனித தோமையார் ஆலயத்தில் காலை 6-00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**அன்று மாலை 4-00 மணியவில் அவரின் உருவப்படம் பருத்தித்துறை 3-ம் குறுக்குத் தெரு சந்தியில் கடற்புலிகளால் திறந்து வைக்கப்படும்.**

பருத்தித்துறை. (2806) - குடும்பத்தினர்